10.10 மணி

அறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதையே நான் மேற்கோளாகக் காட்டி அதையே தீர்ப்பாக வழங்குகிறேன். 'May' implies 'may not' also.

(ஆ) திருச்சி சட்டக் கல்லூரி மாணவர்கள்—போக்குவரத்துத் தொழிலாளர்களிடையே நடைபெற்ற மோதல் குறித்து.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, திருச்சி சட்டக் கல்லூரி மாணவர்கள் சம்பந்தமாக ஒரு பிரச்சினை எழுந்த காரணத்தினாலே, மாணவர்கள் அடிக்கப்பட்டு மிகப் பெரிய பாதிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். போக்குவரத்துத் தொழிலாளர்களோடு ஏற்பட்ட மோதலின் காரணமாக இந்த அளவுக்கு வந்ததாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று முன் தினம் மாணவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட அந்தப் பிரச்சினை ஒரு பயங்கரமான சூழ்நிலையை உருவாக்கி மாணவர்கள் அடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற நிலை உருவாகியிருக்கிறது. நான் ஒன்றை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்தப் பிரச்சினை உருவானதும் அங்கேயிருக்கிற காவல் துறைக்கு தெரிவிக்கப்பட்டிருக்கிறது. காவல் துறை விரைந்து ஒரு நடவடிக்கை எடுத்திருப்பார்களேயானால், நிச்சயமாக அந்த மோதலை ஓரளவிற்கு தவிர்த்து இருக்கலாம். ஆனால் காவல் துறை வருவதற்கு முன்னாலேயே பேருந்து தொழிலாளர்கள் தாக்கினார்கள் என்ற நிலையும், அவர்கள் தாக்கியது கூட பரவாயில்லை அதற்குப் பின்னால் காவலர்கள் வந்து தாக்கியது மிகப் பெரிய கொடுமை என்று சொல்லுகிற அளவுக்கு மாணவர்கள் தரப்பிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல தொழிலாளர்கள் தரப்பில் நாங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கிறோம். எங்கள் வேலைகளுக்கு வேறு பாதிப்பு வருகிறது. பேருந்துகளுக்கு பாதிப்பு வருகிறது என்று தொழிலாளர்கள் தரப்பிலும் சொல்லக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைகள் வருகிற நேரத்தில் காவல் துறை விரைவாகவும் வேகமாகவும் பணியாற்ற வேண்டும் என்பதைச் சொல்லி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், இப்படிப்பட்ட நிலைகள் இனிமேல் உருவாகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் இப்போது அமைதி உருவாக வேண்டிய இந்த நேரத்தில் இது விவாதத்திற்குரிய பிரச்சினையாக ஆகாமல், இதைத் தீர்ப்பதற்கான வேண்டிய நடவடிக்கையில் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வருகிறேன்.

*1990 மார்ச் 23]*

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் மிகுந்த நல்லெண்ணத்தோடு, மாணவர்கள் தொழிலாளர்கள் இடையே ஒரு மோதுதல் உருவானதின் காரணமாக அமைதி கெடக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விடக்கூடாது என்ற ஒரு கருத்தினை இங்கே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல நேற்றைக்கு முன் தினம், இதுபோன்ற ஒரு நிகழ்ச்சி திருச்சியில் நடைபெறுகிறது என்ற செய்தி கேள்விப்பட்டவுடன் பலமுறை தொலைபேசியின் வாயிலாக நான் திருச்சியிலே உள்ள அதிகாரிகளிடத்திலும், இங்கே உள்ள போலீஸ் அதிகாரிகளிடத்திலும், வேறு அதிகாரிகளிடத்திலும் தொடர்பு கொண்டு அமைதி உருவாவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் செய்யுமாறு கேட்டுக் கொண்டிருந்தேன். எனக்கு வந்துள்ள தகவல்களை எதிர்க்கட்சித் தலைவர் இங்கே எழுப்பியுள்ள பிரச்சினையை ஒட்டி தரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருச்சி சட்டக் கல்லூரி இப்போது சிந்தாமணியிலே உள்ள பாப்பம்மாள் சத்திரம் என்ற வாடகைக் கட்டிடத்திலே இயங்கி வருகிறது. 21-3-1990 அன்று பிற்பகல் 2-30 மணிக்கு பொன்மலையில் இருந்து திருவரங்கம் சென்று கொண்டிருந்த தீரன் சின்னமலை போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணம் செய்து கொண்டிருந்த திருச்சி சட்டக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள் 3 பேர், அந்தப் பேருந்தை சட்டக் கல்லூரி பேருந்து நிலையத்திலே நிறுத்தக் கோரியபோது, ஒரு விபத்தைத் தவிர்ப்பதற்காக அந்தப் பேருந்து ஓட்டுநர், அதனை அந்த இடத்தில் நிறுத்துவதற்குப் பதிலாக கொஞ்சம் தள்ளிக் கொண்டு போய் நிறுத்தியிருக்கிறார்கள்.

அதனால் அந்த மாணவர்களுக்கும், அந்த ஓட்டுநருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு சில கடுமையான வார்த்தைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டிருக்கின்றன. பிறகு அதே பேருந்து பிற்பகல் 2-55 மணிக்கு திருவரங்கத்திலிருந்து திரும்பிய போது சட்டக் கல்லூரி மாணவர்கள் 30 பேர்கள் அந்தப் பேருந்தை நிறுத்தி ஓட்டுநர் திரு. செல்வராஜ் என்பவரை அடித்திருக்கிறார்கள். அதைப் பார்த்த அவ்வழியே சென்று கொண்டிருந்த அரசுப் போக்குவரத்துக் கழக பேருந்து ஓட்டுநர்களும், நடத்துநர்களும், சட்டக் கல்லூரிக்கு எதிரேயே பேருந்துகளை நிறுத்தி விட்டு, எதிரே உள்ள குடிசைகளில் வசிக்கும் மக்கள் 100 பேரோடு சேர்ந்து சட்டக் கல்லூரி மாணவர்களை கல்லூரிக்குள்ளேயே விரட்டிச் சென்று அவர்களைத் தாக்கியதில் மாணவர்கள் 3 பேரும், மாணவி ஒருவரும் சிறு காயம் அடைந்துள்ளார்கள்.

[டாக்டர் மு. கருணாநிதி] 1990 மார்ச் 23

மேலும், சட்டக்கல்லூரி கண்ணாடி ஜன்னல்களையும், குழல் விளக்குகளையும், மாணவர்களுக்குச் சொந்தமான இரண்டு சைக்கிள்கள், ஒரு ஸ்கூட்டர், ஒரு மோட்டார் சைக்கிள் போன்றவைகளையும் அவர்கள் சேதப்படுத்தி இருக்கின்றார்கள். சட்டக் கல்லூரி மாணவர்கள் திருப்பித் தாக்கியதில் பேருந்து ஓட்டுநர்கள் 9 பேரும், நடத்துநர்கள் 5 பேரும் மற்றும் ஒரு பயணியும் காயம் அடைந்திருக்கின்றார்கள். இந்தச் சம்பவம் குறித்து தகவல் கிடைத்தவுடன் உடனடியாக திருச்சி நகர காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் தக்க போலீஸ் படையோடு விரைந்து சென்று இரண்டு தரப்பினர்களையும் விலக்கி, மோதுதலைத் தவிர்த்தபோது பொன்மலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் பாலசுப்ரமணியம், தலைமைக் காவலர் பன்னீர்செல்வம், காவலர் ரவி ஆகிய மூவர் மாணவர்களால் வீசப்பட்ட கற்களினால் சிறு காயமடைந்துள்ளார்கள்.

(10–15 மணி)

துணைக் கண்காணிப்பாளர் காயமடைந்தவர்களை உடனடியாக மருத்துவ மனைக்கு அனுப்ப ஏற்பாடு செய்தார்கள். காயமடைந்தவர்களில் ஓட்டுநர் செபாஸ்டியன் தவிர மற்ற அனைவரும் புற நோயாளிகளாகச் சிகிச்சை பெற்றுச் சென்றுவிட்டார்கள். செபாஸ்டியன் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வருகிறார். மாலை நாலரை மணிக்கு போக்குவரத்து மீண்டும் சீர் செய்யப்பட்டது. தங்கள் மீது தாக்குதல் நடத்திய ஓட்டுநர்கள், நடத்துனர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டும், கல்லூரிக்கு எதிரே உள்ள குடிசைகளை அகற்ற வேண்டும் என்று கோரியும், கல்லூரிக்குள் நுழைந்து மாணவர்களை விலக்கியபோது, திருச்சி நகர காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், மாணவர் ஒருவரை அடித்துவிட்டதாகக் குறை கூறியும், சுமார் 150 மாணவர்கள் சட்டக் கல்லூரி வராந்தாவிலே அமர்ந்து வெளியே வர மறுத்துவிட்டார்கள். டி.எஸ்.பி., டி.ஆர்.ஓ., மற்றும் ஆர்.டி.ஓ. ஆகியோர் செய்த சமரச முயற்சி பயனளிக்காமல் போகவே, மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாகச் சென்று மாணவர்களைச் சந்தித்து, கல்லூரி எதிரே உள்ள குடிசைகளை அகற்ற நடவடிக்கை எடுப்பதாகவும், அல்லது சட்டக் கல்லூரியைப் பாரதிதாசன் பல்கலைக் கழக வளாகத்திற்குள் மாற்ற ஏற்பாடு செய்வதாகவும், சம்பவத்திற்குக் காரணமான ஓட்டுநர், நடத்துனர் மற்றும் பொது மக்கள் சிலர் மீது முறையான விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுப்பதாகவும், சட்டக் கல்லூரி பேருந்து நிறுத்தத்தில் பேருந்தை நிறுத்தாமல் சென்ற ஓட்டுநர் மற்றும் நடத்துனர் மீது துறை ஏற்ற நடவடிக்கைகள் எடுக்க ஏற்பாடு செய்வதாகவும் உறுதி கூறியதற்குப் பிறகு, இரவு $1\frac{1}{2}$ மணிக்கு மாணவர்கள் கலைந்து சென்றார்கள். அந்தப் பேச்சுவார்த்தைக்கிணங்க, மாணவர்கள் கொடுத்த புகாரின் பேரில், குற்ற எண். 282/90 இந்திய தண்டனைச் சட்டம் 147, 148, 448, 427, 324, 323 பிரிவுகளின் கீழ் மற்றொரு வழக்குமாக இரண்டு வழக்குகள்

பதிவு செய்யப்பட்டு, விசாரணையிலே உள்ளது. சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும், ஓட்டுநர்களுக்குமிடையே நடந்த மோதலைப் பயன்படுத்தி, மாணவர்களைத் தாக்கிய நான்கு பேர் 22-3-1990 அன்று இரவே கைது செய்யப்பட்டு இருக்கின்றார்கள்.

சட்டக் கல்லூரி முதல்வர் 22, 23 ஆகிய நாட்கள் விடுமுறை என்று அறிவித்தார். இருப்பினும், காலையிலே வகுப்பிற்கு வந்த மாணவர்கள் சிலர் முதல் நாள் ஏற்பட்ட சமரச நடவடிக்கை யிலே திருப்தி கொள்ளாமல், அவர்கள் உண்ணாவிரதம் தொடங்கினார்கள். இரவு 8 மணிக்கு உண்ணாவிரதம் இருந்த மாணவர்களில், மாணவிகள் 15 பேரும், மாணவர்கள் 35 பேரும் அந்த இடத்தை விட்டுச் சென்றுவிட்டார்கள். வருவாய்த்துறை, காவல்துறையினர் இதுவரை எடுத்த நடவடிக்கைகளை எடுத்துக்கூறி, தொடர்ந்து சமரச முயற்சிகளிலே ஈடுபட்டு வருகின்றார்கள். தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செயயப்பட்டு வருகின்றன. இது அமைதிக்கு ஊனம் விளைவிக்காத வகையில், மாணவர்களிடையேயும், தொழிலாளர்களிடையேயும் ஒரு சமரச உடன்பாட்டைச் செய்வதற்கு அதிகாரிகள் முயன்று வருகின்றார்கள். நல்ல முடிவு ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

(இ) கோவையில் ஒரு முஸ்லிம் இளைஞர் கொல்லப்பட்டுள்ளது குறித்து.

திரு. எம். அப்துல் லத்தீப்: பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமான ஒரு பிரச்சினை குறித்து, அது தேவை என்று கருதப்பட்ட காரணத்தினால் மிகுந்த தயக்கத்தோடு நான் இங்கே அதனை எழுப்புகிறேன். அமைதிப் பூங்காவாக விளங்குகிற தமிழகத்தில் அண்மைக் காலத்தில் வன்முறைகள் தூண்டப்படக்கூடிய அளவிற்கு இனத் துவேஷங்கள் தூண்டப்பட்டு, அதன் காரணமாக, கொலை, கொள்ளை என்ற அளவிற்குத் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. அதுவும் குறிப்பாக இனம் காட்டப்பட்ட ஒரு சில பகுதிகள் இந்தச் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு வருகின்றன.

(10-20 மணி)

அண்மையில் கோயம்புத்தூரில் திங்கட்கிழமை, 28 வயது மதிக்கத்தக்க ஒரு முஸ்லீம் இளைஞன், அதுவும் அரசுத் துறையிலே, மின் துறையிலே வேலை செய்து கொண்டிருக்கிற ஒரு இளைஞன் பிணமாக கலெக்டர் அலுவலகத்திற்குப் பின்னாலே கண்டெடுக்கப்பட்டான். அது தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை முறையாக எடுப்பதற்குப் பதிலாக, போலீஸ் துறை கூட, அந்தப் பிணத்தை அவன் சார்ந்துள்ள குடும்ப இடுகாட்டில் அடக்கம் செய்வதற்கு அவர்கள் கோரியபோது, அதை கூட அவர்கள் அனுமதிக்காத நிலையில் தேவையில்லாத ஒரு கொந்தளிப்பு அங்கே ஏற்பட்டிருக்கிறது. கோவையைப் பொறுத்தவரையில் லத்தீப் என்கின்ற ஒரு இளைஞன் நல்ல கடை வீதியிலே ஜன நடமாட்டம் உள்ள ஒரு பகுதியில் 6 மாதத்திற்கு